


**21. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **மக்களவை மறுதேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்** பட்டது.

2. **குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல்** இன்றுடன் நிறைவடைகிறது.

**INDI கூட்டணி வேட்பாளர் திரு. சுதர்ஷன் ரெட்டி தமது** வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

3. **தமிழ்நாட்டில் நகர்ப்புற அரசு உதவிபெறும் தொடக்கப்** பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவுப்படுத்தப்படுகிறது.

4. **திருச்சிராப்பள்ளி மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க** 3 தொகுப்புகளாக சாலைகள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. **அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர்** இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் யூகி பாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை முன்னேறியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**நாடாளுமன்றம்**

**மக்களவை மறுதேதி குறிப்பிடப்படாமல் இன்று** ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மாதம் 21-ம் தேதி தொடங்கிய மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவையில் 14 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டதாகவும்,

12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் அவைத்தலைவர் திரு.ஓம்பிர்லா தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் தொடர்பாக நடைபெற்ற 2 நாள் சிறப்பு விவாதம் பிரதமர் திரு. நரேந்திரமோடியின் உரையுடன் நிறைவடைந்ததாக அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் விண்வெளி திட்ட சாதனைகள் குறித்த சிறப்பு விவாதத்திற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

419 கேள்விகள் அட்டவணையில் இடம்பெற்ற போதிலும், அவை அலுவல்கள் முடங்கியதால் 55 கேள்விகளுக்கு மட்டுமே பதில் வழங்கப்பட்டதாக கூறினார்.

அவை அலுவல்களுக்கு இடையூறு ஏற்பட்டதால் நேர இழப்பு ஏற்பட்டதாக அதிருப்தி தெரிவித்த திரு. ஓம்பிர்லா 37 மணி நேரம் மட்டுமே அவை செயல்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

நடப்பு கூட்டத்தொடரில் எதிர்கட்சிகளின் அமளி நடவடிக்கைகள் நாடாளுமன்ற மாண்புக்கு ஏற்புடையது அல்ல என்றும் அவர் எடுத்துரைத்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை பராமரிப்பது உறுப்பினர்களின் கடமை என்று சுட்டிக்காட்டிய திரு.ஓம்பிர்லா, நாடாளுமன்ற வளாகம் எப்பொழுதுமே மதிப்புடனும், மரியாதையுடனும் திகழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முன்னதாக இன்றுகாலை பீஹார் வாக்காளர் திருத்த பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் வாக்களார் திருத்த பட்டியல் விவகாரம் எதிரொலித்ததால் பிற்பகல் 2 மணிவரை துணைதலைவர் திரு. ஹரிவன்ஷ் அவையை ஒத்திவைத்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திமோடி பீஹார், மேற்குவங்க மாநிலங்களில்** நாளை பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கிவைக்கிறார்.

பீஹார் மாநிலம் கயாவில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலும், மேற்குவங்கத்தில் 5 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கிவைக்கிறார்.

❖❖❖❖❖❖❖

**சுதர்சன்ரெட்டி**

**குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிடும் INDI** கூட்டணி வேட்பாளரான திரு.**சுதர்சன்ரெட்டி** வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலாளரிடம் அவர் தமது வேட்புமனுவை சமர்ப்பித்தார்.

காங்கிரஸ் கட்சியின் தேசியதலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட **INDI** கூட்டணி கட்சித்தலைவர்கள் உடனிருந்தனர்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அடுத்தமாதம் 9-ம் தேதி நடைபெறும் நிலையில் வேட்புமனுதாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று மனுதாக்கல் செய்தார்.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை விலக்கி கொள்ள வரும் 25-ம் தேதி கடைசிநாளாகும்.

குடியரசு துணை தலைவர் பதவியை உடல்நல பிரச்சனையால் திரு.ஜக்தீப் தன்கர் சென்ற மாதம் ராஜினாமா செய்ததை அடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

நாட்டில் நடைபெறும் 17ஆவது குடியரசு துணை தலைவர் தேர்தலாகும் இது.

❖❖❖❖❖❖❖

**எஸ்.ஜெய்சங்கர்**

**ரஷ்யா சென்றுள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்** டாக்டர்.எஸ்.ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவுடன் மாஸ்கோவில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

வேளாண், அறிவியல் தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இதில் ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**திருநெல்வேலியில் மண்டல அளவிலான** வாக்குச்சாவடி முகவர்கள் மாநாடு பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷா தலைமையில் நாளை நடைபெறுகிறது

தச்சநல்லூரில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பங்கேற்க ஹெலிகாப்டர் மூலம் நாளை பிற்பகல் நெல்லை வரும் திரு. அமித்ஷா வாக்குச்சாவடி முகவர்கள் மத்தியில் உரையாற்றுகிறார்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர், தென்காசி உள்ளிட்ட 5 மாவட்டங்களிலுள்ள 28 சட்டப்பேரவை தொகுதிகளை சேர்ந்த பி.ஜே.பி. வாக்குச்சாவடி முகவர்கள் இதில் பங்கேற்கின்றனர். திரு. அமித்ஷாவின் வருகையை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

**கிஷண்ரெட்டி**

**நிலக்கரி அமைச்சகத்தின் 13-வது சுற்று வர்த்தக** சுரங்க ஏலம் இத்துறைக்கான அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

நிலக்கரி உற்பத்தி துறையில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் வகையில் இந்த ஏலம் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖

**கோவை வாய்ஸ்**

**மத்திய அரசு கொண்டுவந்துள்ள இணையவழி** விளையாட்டு மேம்பாட்டு ஒழுங்குமுறை சட்ட மசோதாவை வரவேற்பதாக கோவையை சேர்ந்த நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு.ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**காலை உணவுத்திட்டம்**

**தமிழகத்தில் நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவிபெறும்** தொடக்கப்பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக அரசு இன்று அறிவித்துள்ளது.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் சென்னையில் வரும் 26-ம் தேதி இதனை தொடங்கிவைக்கிறார்.

இதன்மூலம் 1 முதல் 5-ம் வகுப்புவரை பயிலும் 3 லட்சத்து 5 ஆயிரம் மாணாக்கர் பயன்பெறுவர்.

❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

திருச்சிராப்பள்ளி மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் எடமலைபட்டிபுதூர்-முதல் கரூர் புறவழிச்சாலை வரை 3 தொகுப்புகளாக சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி கோரையாறு பகுதியில் செயல்படுத்தப்படும் புறவழிச்சாலை பணிகளை அமைச்சர் இன்று ஆய்வு செய்ததோடு மூன்றாவது தொகுப்புக்கான சாலை அமைக்கும் இடத்தை பார்வையிட்டார். இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**தா. மோ. அன்பரசன்**

**நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே அரசு பட்டுக்கூடு** வளாகத்திற்கு மாநில சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் இன்று அடிக்கல் நாட்டினார்.

2 கோடியே 20 லட்சம் ரூபாய் மப்பீட்டில் இவ்வளாகம் அமையவுள்ளது.

தொடர்ந்து 147 பட்டு விவசாயிகளுக்கு 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன பட்டுப்புழு தளவாடங்களை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**வாழை ஆராய்ச்சி மையம்**

**திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின்** 32-வது நிறுவன நாள் மற்றும் விவசாயிகள் தினவிழா இன்று நடைபெற்றது.

வாழை மதிப்பு கூட்டல் உற்பத்தி பொருட்களுக்கு அதிகளவு வரவேற்பு இருப்பதால் நவீன தொழில்நுட்பங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்றவற்றால் வாழையின் திறன்கள் வெளிப்படுத்தப் படுவதாக இம்மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது.

மரபணு திருத்த மூலம் வாழை வாடல்நோய் வைரஸ் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி கொண்ட ரகங்களை உருவாக்குவது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் தெரிவித்தனர்.

உயர்திறன் கொண்ட உயிரி தொழில்நுட்பங்கள் மூலம் நெய் பூவன், நேந்திரன், சிகப்பு வாழை மற்றும் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கிய சிறப்பு ரகங்களின் கன்றுகள் 25 மாவட்ட வாழை சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

சென்னை நந்தனம் மைதானத்தில் செம்பொழில் சார்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ள நாட்டுப்புற கலைகள் மற்றும் கிராமிய கண்காட்சியை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**மூர்த்தி**

**மதுரை மாவட்டம் ஊத்தங்குடியில் கடந்த ஜூலை** மாதத்திற்கான பதிவுத்துறை அலுவலர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள் மாவட்ட பதிவாளர்கள் மற்றும் வருவாய் அலுவலர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

**சேலம் வாய்ஸ்**

**தமிழக டெல்டா மாவட்ட விவசாயிகளின்** ஜீவநாடியாக விளங்கும் மேட்டூர் அணை 91 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இதுகுறித்து எமது சேலம் செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**காவலர்கள் தேர்வு**

**தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 833 காவலர்களை தேர்வு** செய்வதற்கான எழுத்துதேர்வு வரும் நவம்பர் 9-ம் தேதி நடைபெறும் என்று சீருடை பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

தகுதியுடையவர்கள் நாளைமுதல் அடுத்தமாதம் 21-ம் தேதிவரை tnusrb.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**மத்திய நிதியமைச்சகம் சார்பில் நாடுமுழுவதும்** நடைபெறும் 3 மாதகால சிறப்பு விழிப்புணர்வு முகாமை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் திருமதி. உமாசங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிருஷ்ணகிரியில் இம்முகாமில் இன்று உரையாற்றிய அவர், வங்கி திட்டங்களில் ஏற்படும் பிரச்சனைகளில் இதில் தீர்வுகாணலாம் என்றார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின்** முகாம்கள் நாளை ஆலங்குடி, திருமயம், பாலாண்டாம் பட்டி உள்ளிட்ட இடங்களில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

**உலக மனித நேய தினத்தை முன்னிட்டு பெரம்பலூரில்** விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு. அருண்ராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

கல்லூரி மாணாக்கர், ஆசிரியர்கள் பொதுமக்கள் என பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் பங்கேற்றனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் நுண்ணுயிர் பாசனத்திற்கு** விவசாயிகள் அதிகளவில் விண்ணப்பிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் இன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

**தமிழ்நாட்டில் தொழில்முனைவோர் மேம்பாட்டுத்** திட்டத்தின் கீழ் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் ஒன்றாம் தேதிமுதல் 3-ம் தேதிவரை சென்னையில் நடைபெறவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

குறைந்தபட்சம் 10-ம் வகுப்பு கல்வி தகுதியுடைய இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**திருச்சி மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் காலியாக** உள்ள உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நாளை தொடங்கவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

இத்தேர்வுகள் வரும் அக்டோபர் 11-ம் தேதி நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ்** போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் யூகி பாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை - அமெரிக்கா, மெக்சிக்கோ இணையை 2-6, 6-3, 10-4 எனும் செட்களில் வென்றது.

நாளை நடைபெறும் காலிறுதியில் யூகிபாம்ப்ரி இணை ரோஹன் போப்பன்னா இணையுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖